# தமிழ்நாடு மாநில திருநங்கைகள் நலவாரிய உறுப்பினர்களின் கூட்டறிக்கை

---

**22 மார்ச், 2026**

## <u>“திருநர்கள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டத் திருத்த மசோதாவை” உடனடியாகத் திரும்பப்பெற வேண்டும்!</u>

தமிழ்நாடு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்படும், தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரிய உறுப்பினர்கள் அனைவரும் (13 பேர் பெயர் பட்டியல் கடைசி பக்கத்தில்) கூட்டாக இணைந்து, கடந்த 13.03.2026 அன்று பாராளுமன்ற மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட திருநர் (பாதுகாப்பு உரிமைகள்) சட்டத் திருத்த மசோதா 2026ஐ எதிர்கின்றோம்.

இந்த மசோதா இந்திய அரசியலமைப்பு சட்டம் வழங்கும் அடிப்படை உரிமைகளை மீறுகிறது. மேலும் இது திருநர் உரிமைகள் தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பான **தேசிய சட்ட சேவைகள் ஆணையம் (NALSA) vs இந்திய யூனியன் (2014)** தீர்ப்புக்கும், சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சுகாதார தரநிலைகளுக்கும் மனித உரிமைகளுக்கும் எதிரானதாகும்.

இந்த மசோதா, திருநர் சமூகத்தினர் தங்களைத் தாங்களே அடையாளப்படுத்திக் கொள்ளும் உரிமையை நீக்குகிறது. அதற்குப் பதிலாக, அந்த அதிகாரத்தை அரசு நியமிக்கும் மருத்துவ குழுக்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்குகிறது. இதனால், திருநர் மக்கள் தங்களின் அடையாளத்தை நிரூபிக்க மருத்துவ பரிசோதனை மற்றும் நிர்வாக அனுமதி பெற வேண்டிய கட்டாயம் உருவாகிறது. இது அவர்களின் தனியுரிமை, உடல் தன்னாட்சி, சுயமரியாதை மற்றும் சமத்துவத்தை மீறுகிறது. ஏற்கனவே புறக்கணிக்கப்பட்டிருக்கும் திருநர் சமூகத்திற்கு இது கூடுதல் பாதிப்பையும் அநீதியையும் ஏற்படுத்துகிறது

இந்த மசோதா, வரையறை (Definition) என்ற பெயரில் திருநங்கை, திருநம்பி, மற்றும் இடைப்பாலினர் சமூகத்தின் அடையாளங்களை நீக்குகிறது. இதனால் திருநர் சமூகங்கள் சட்ட அங்கீகாரமும், பாதுகாப்பும் பெற முடியாத நிலை உருவாகிறது.

# தமிழ்நாடு மாநில திருநங்கைகள் நலவாரிய உறுப்பினர்களின் கூட்டறிக்கை

---

இந்த மசோதா, திருநர் அங்கீகாரம் பெற ஹார்மோன் சிகிச்சை, மருத்துவ நடைமுறைகள் மற்றும் அறுவை சிகிச்சை ஆகியவற்றை கட்டாயமாக்குகிறது. மேலும், தனிப்பட்ட மருத்துவ பதிவுகளை மாவட்ட நிர்வாகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என்ற புதிய கண்காணிப்பு அமைப்பையும் உருவாக்குகிறது.

திருநர் குடும்ப கட்டமைப்புகள், செயற்பாட்டாளர்கள், சமூக அமைப்புகள் மற்றும் ஆதரவாளர்கள் மீது தவறான குற்றச்சாட்டுகள் சுமத்தி, பழிவாங்கும் முயற்சியை உருவாக்குகிறது. மேலும், “திருநர் நபர்கள் மற்றவர்களை வற்புறுத்தி திருநராக மாற்றுகிறார்கள்” என்ற பழைய, தீங்கான வெறுப்பு பிரச்சாரத்தை இது மீண்டும் உயிர்ப்பிக்கிறது.

இந்த மசோதா, காவல்துறை, நீதிமன்றம், மாவட்ட நிர்வாகம் மற்றும் மருத்துவ குழுக்களுக்கு அதிகாரம் அளிக்கிறது; ஆனால் திருநர் சமூகத்தினரிடமிருந்து அந்த அதிகாரத்தை பறிக்கிறது. இதனால், திருநர் அடையாளத்தின் கீழ் வரும் எந்த சமூகத்திற்கும் நன்மை இல்லை.

பல காலமாக கீழ்க்கண்ட கோரிக்கைகளை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.

- கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் கிடைமட்ட ஒதுக்கீடு (Horizontal Reservation)
- வயது தளர்வு மற்றும் மதிப்பெண் தளர்வு
- கல்வி மற்றும் அரசு வேலை வாய்ப்புகளுக்கான அணுகல் எளிமையாக்கல்
- வீட்டு வசதித் திட்டங்கள்
- பொதுப் போக்குவரத்து
- தரமான மற்றும் அணுகக்கூடிய சுகாதார சேவைகள்
- ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு
- பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் முதிய திருநருக்கான ஆதரவு

# தமிழ்நாடு மாநில திருநங்கைகள் நலவாரிய உறுப்பினர்களின் கூட்டறிக்கை

---

**ஒன்றிய அரசுக்கு எங்கள் கோரிக்கை**
திருநர் உரிமை திருத்த மசோதா 2026-ஐ உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். பாலின சுய அடையாள உரிமையை அரசியலமைப்பின் கீழ் பாதுகாக்க வேண்டும்!
திருநர் பாதுகாப்பு சட்டம், 2019-ஐ முழுமையாக செயல்படுத்தவும், இது தன்னிச்சையான பாலின அடையாளத்தை உறுதி செய்யும் மற்றும் திருநர் நபர்களின் மரியாதை, சுதந்திரம் மற்றும் உரிமைகளை பாதுகாக்கும்.

எதிர்காலத்தில் சட்டம் அல்லது அரசுத் துறைகள் எடுக்கும் முன்னெடுப்புகளில், திருநங்கை, திருநம்பி, இடைப்பாலினர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட சமூக மக்களுடனும், நலவாரிய உறுப்பினரகளிடமும் முன்னதாக ஆலோசனைகளை பெற வேண்டும்.
திருநர் சமூகத்திற்கு, எந்த விதமான ஆதரவும் வழங்கப்படாமல் சொந்த சமூகத்தையே குற்றவாளியாகத் திணிக்க நினைக்கும் இது போன்ற எந்த மசோதாக்களையும் நாங்கள் ஏற்க மாட்டோம். எதிர்க்கின்றோம்.

இப்படிக்கு,
தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரிய உறுப்பினர்கள்

**முனைவர் அ.ரியா, Ex MC, நாமக்கல் மாவட்டம்**
**முனைவர். T. பியூட்டி, தூத்துக்குடி மாவட்டம்**
**முனைவர் R. அனுஸ்ரீ பி.இ, சென்னை மாவட்டம்**
**சத்தியஸ்ரீ ஷர்மிளா B.C. S., B. L., இந்தியாவின் முதல் திருநங்கை வழக்கறிஞர்**
**M. நிலா, நிறுவனர் ஃபார்ம் பவுண்டேஷன், செங்கல்பட்டு மாவட்டம்**
**M. ராதா, சென்னை மாவட்டம்**
**பிரியா பாபு, மதுரை மாவட்டம்**
**K. அருணா, சென்னை மாவட்டம்**
**முனைவர். P. மோகனா நாயக், திருச்சி மாவட்டம்**
**முனைவர். S. சுதா, நிறுவன இயக்குநர் - தோழி, சென்னை மாவட்டம்**
**S. ஆதிசிவன், மதுரை மாவட்டம்**
**தங்க வினோதன், M. Sc, MBA, தி வாய்ஸ் ஆப் இன்டர்செக்ஸ் இந்தியா, கோவை**
**வித்யா தினகரன், மன நல ஆலோசகர், சென்னை மாவட்டம்**